# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018
## அரபு இலக்கிய நயம் / අරාබි සාහිත්‍ය රසාස්වාදය

தரம் : 10 நேரம்: 3 மணித்தியாலம்

**பகுதி 1,11 இலுள்ளஎல்லாவினாக்களுக்கும் பகுதி 111 இலிருந்துஎவையேனும் இரண்டு வினாக்களுக்குமாகமொத்தம் 5 வினாக்களுக்குவிடைதருக.**

**01**

1. அரபிலக்கியம் என்பதன் மூலம் நாடப்படுவது யாது?
2. அரபு இலக்கியநயம் பலவடிவங்களைக் கொண்டுள்ளதுஅவற்றுள்,
   a) அல் ஹிஜாஉ (الهجاء)என்பதன் மூலம் நாடப்படுவதுயாது?
   b) அல் ரஸாஉ (الرثاء)என்றால் என்ன?
3. அல்குர்ஆனின் இலக்கியத்திற்கு முன்னால் தங்களது இயலாமைகளை ஏற்றுக் கொண்ட ஜாஹிலிய்யாக்கால கவிஞர்கள் இருவரைக் குறிப்பிடுக.
4. சூறதுல் காபிரூனின் மையக் கருத்து யாது?
5. தஜ்வீத் கலையில் இழ்ஹார் (الإظهار) என்றால் என்ன? அதன் எழுத்துக்களை குறிப்பிடுக.
6. طلع البدر علينا من ثنيات الوداع

   وجب الشكر علينا ماعا الله داع

   a) மேற்படிகவிதையாரால் பாடப்பட்டது?

   b) இக்கவிதையில் கோடிடப்பட்ட சொற்களின் பொருளைத் தருக.
7. صل صل يا إنسان طهر قلبك بالإيمان எனும் கவிதை அடியை மொழிபெயர்க்க.
8. முஅல்லகாத் எக்காலப் பகுதியில் தொகுக்கப்பட்டது?
9. மக்கி சூறாக்களின் இரு பண்புகளைக் குறிப்பிடுக.
10. பின்வரும் துஆவைப் பூரணப்படுத்திஅதுஓதப்படும் சந்தர்ப்பத்தைதருக?

    اللهم افتح لي أبواب ....................................

(02x 10 =20புள்ளிகள்)

**02 பின்வரும் சூறாவைமையப்படுத்திபின்வருவனவற்றிற்குவிடைதருக.**

سُورَةُ المَسَدِ

آياتها ٥ — ترتيبها ١١١

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

تَبَّتۡ يَدَآ أَبِي لَهَبٖ وَتَبَّ ١ مَآ أَغۡنَىٰ عَنۡهُ مَالُهُۥ وَمَا
كَسَبَ ٢ سَيَصۡلَىٰ نَارٗا ذَاتَ لَهَبٖ ٣ وَٱمۡرَأَتُهُۥ
حَمَّالَةَ ٱلۡحَطَبِ ٤ فِي جِيدِهَا حَبۡلٞ مِّن مَّسَدِۭ ٥

I. மேற்படிசூறாவைமொழிபெயர்க்குக.

II. இந்தசூறா அருளப்பட்டபின்னனியாது?

III. இச்சூறாவில் காணப்படும் இலக்கியநயத்தைக் குறிப்பிடுக.

IV. 2ஆம்,3ஆம் ஆயத்துக்களில் காணப்படும் தஜ்வீத் சட்டங்களை முறையே குறிப்பிடுக.

V. இச்சூறாவின் போதனைகள் மூன்றைக் குறிப்பிடுக.

(05x 05=25புள்ளிகள்)

## பகுதி 11

**03 பின்வரும் கவிதை அடியை வாசித்துகீழுள்ளவினாக்களுக்குவிடைதருக.**

رَمَضَانُ يَا رَمَضَانُ     يَا مُوْسِمُ القُرْآنَ
أَقبَلْتَ بِالبُشْرَى     وَالخَيْرَ وَالغُفْرَانَ
يَاإِخْوَتِيْ هَيَّا     صُوْمُوْا مَعِيْ رَمَضَانَ
هَيَّا بِنَا نَعْمَلُ     لِلْوَاحِدِ الدَّيَّان
رَمَضَانُ أَنْوَارٌ     تَهْدِيْ إِلَى الإِيْمَانِ،
هَيَّا نَحْيِيْهِ     بِالذِّكْرِ وَالإِحْسَانِ

1. இக்கவிதையைமொழிபெயர்க்க.
2. இக்கவிதையில் காணப்படும் இலக்கியநயங்களைக் குறிப்பிடுக.
3. கோடிடப்பட்ட சொற்களின் கருத்தைத் தருக.
4. கவிதையின் போதனைகளைக் குறிப்பிடுக.
5. கவிதைக்குப் பொருத்தமான தலைப்பொன்றை இடுக.

(5x5= 25புள்ளிகள்)

## பகுதி– 111

**இருவினாக்களுக்குவிடைதருக. (ஒருவினாவிற்கு 15 புள்ளிகள்)**

**04 பின்வரும் நபிமொழியைவாசித்துஅதன் கீழுள்ளவினாக்களுக்குவிடைதருக.**

أَرَأَيْتُمْ لَوْ أَنَّ نَهْرًا بِبَابِ أَحَدِكُمْ يَغْتَسِلُ فِيْهَ كُلَّ يَوْمٍ خَمْسَ مَرَّاتٍ، هَلْ يَبْقَى مِنْ دَرَنِهِ شَيْءٌ؟ قَالُوْا: لَا يَبْقَي مِنْ دَرَنِهِ شَيْئٌ قَالَ: فَكَذَلِكَ مَثَلُ الصَّلَوَاتِ الْخَمْسِ يَمْحُو اللهُ بِهِنَّ الْخَطَايَا.

I. மேற்படிநபிமொழியின் பொருளை உமது மொழி நடையில் எழுதுக.

II. மேற்படிநபிமொழிஉணர்த்தும் போதனைகளைக் குறிப்பிடுக.

III. மேற்படிநபிமொழியில் காணப்படும் உவமானம், உவமேயம் என்பவற்றைக் குறிப்பிடுக.

**05 பின்வரும் துஆக்களைவாசித்துஅதன் கீழுள்ளவினாக்களுக்குவிடைதருக.**

a) الحمد لله الذى كسانى هذا الثوب ورزقنيه من غير حول مني ولا قوة.

b) بسم الله ولجنا وبسم الله خرجنا وعلى الله ربنا توكلنا.

c) اللهم افتحلي ابواب رحمتك

I. மேற்படிதுஆக்களில் இரண்டைமொழிபெயர்க்குக.

II. மேற்படிதுஆக்களில் இரண்டிற்குசந்தர்ப்பம் கூறுக.

III. மேற்படிதுஆக்களில் ஒன்றின் இலக்கியநயத்தைக் குறிப்பிடுக.

**06 பின்வருவனவற்றுல் எவையேனும் மூன்றிற்குசிறுகுறிப்புஎழுதுக.**

I. அல்குர்ஆனின் இலக்கியநயம்

II. ஜாஹிலிய்யாகால இலக்கியத்தின் சிறப்புக்கள்

III. ஹதீஸின் முக்கியத்துவம்

IV. தஜ்வீத் கலை

V. மதனிசூறாக்களின் சிறப்பம்சம்

***